27th April 1959]

இளாஸ்கள் வைக்கக்கூடாதென்று ஒரு சட்டம் போட்டு அதை அங்குள்ள பஞ்சாயத்து போர்டு மூலம் கவனிக்கும்படிச் செய்வதற்கு வேண்டிய நடவடிக்கைகளை சர்க்கார் எடுப்பார்களா ?

THE HON. SRI P. KAKKAN : கனம் அங்கத்தினர்கள் அவர்கள் சொல்வது மாதிரி, ஒரு சில குக்கிராமங்களில் அப்படி யிருக்கிறது என்பதை நானும் ஒத்துக்கொள்கிறேன். அப்படி இல்லை என்று நான் சொல்ல வில்லை. இருந்தாலும் குக்கிராமங்களிலும் சரி, எந்த இடமாயிருந்தாலும் சரி, ஹரிஜன மக்களும் மற்ற மக்களோடு சமத்துவமாக நடத்தப்பட வேண்டு மென்பதற்காக போலீஸ் அதிகாரிகளிடமும் ஏற்பாடு செய்து அதற்காக மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை கூடுகிற ஹரிஜன நல கமிட்டியில் சம் பந்தப்பட்ட அதிகாரிகள் வருகிறார்கள். அப்பொழுது, இங்கு சொல்லப்படுகிற விஷயங்களைக் கவனிக்கிறார்கள். ஆகவே, யாரை நம்பி சட்டத்தையும், நீதியையும், ஒழுங்கையும் நடத்த வேண்டுமென்று ஒப்படைத்திருக்கிறார் களோ அவர்கள் தக்க முறையில் அதைப் பார்த்துக்கொள்வார்கள்.

Financial Assistance to South Arcot District Board

MR. SPEAKER : கனம் அங்கத்தினர் ஸ்ரீ எ. கோவிந்தசாமி அவர் கள் இடத்தில் இல்லாததால், கேள்வியும் பதிலும் சட்டசபை விவாத வெளி யீட்டில் பிரசுரிக்கப்படும்.

*157 Q.—SRI A. GOVINDASAMY : ஸ்தலஸ்தாபன அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) தென்னாற்காடு ஜில்லா போர்டு நிதி நிலையை உயர்த்திக் கொடுக் கும்படி மாவட்ட சட்டசபை உறுப்பினர் 14 பேர்கள் கையொப்பம் இட்டு கொடுத்திருக்கிறார்களா ?

(ஆ) அதன்பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : (a) Yes, Sir.

(b) An additional grant of Rs. 2,66,300 for road and bridge works included in the Second Five-Year Plan and a grant of Rs. 61,900 for payment of contribution towards cost of works taken up under special programmes have been sanctioned.

Tamil Typewriters

*158 Q.—SRI K. SATTANATHA KARAYALAR (on behalf of SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether it is a fact that the Government have approved a new keyboard for Tamil typewriters;

(b) if so, the reasons for the change;

(c) whether the new typewriters are available in the market; and

(d) if so, who are the manufacturers?

THE HON. SRI C. SUBRAMANIAM : (a) Yes, Sir.